UNIVERSITY OF JAFFNA LIBRARY 1975 PERIODICALS

பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANADU

மலர் 19 தை 20 ஸபர் 23 இதழ் 354
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 2-2-78

சிறிமா யாத்திரை போகவேண்டுமாம்

[கொழும்பு]

முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தமது ஆட்சிக் காலத்தில் தாம்செய்த தவறுகளுக்குப் பிராயச்சித்தம் தேடுவதற்காக தலையில் சாம்பல் சட்டியை வைத்துக்கொண்டு முனீஸ்வரத்துக்கும் யாத்திரை போக வேண்டும்.

இவ்வாறுதபால் தந்தி அமைச்சர் திரு. ஷெல்டன் ஜெயசிங்கா நேற்றுமுன் தினம் தேசிய அரசுப் பேரவையில் கூறினார்.

1971-ம் ஆண்டு பொலிசார் இளைஞர் ஒருவரை சந்தேகத்தின்பேரில் கைதுசெய்து

(2ம் பக்கம் பார்க்க)

துரையப்பா கொலை -- அருளம்பலம் கொலை முயற்சி -- கனகரத்தினம் கொலை முயற்சி

பின்னணியில் அரசியல் இயக்கம்?

பேரவையில் பிரஸ்தாபம்

(கொழும்பு)

முன்னாள் யாழ். மேயர் அல்பிரட் துரையப்பா கொலை, முன்னாள் நல்லூர் எம். பி. திரு. ஸி. அருளம்பலம் கொலை முயற்சி, மொத்துவில் எம். பி. கனகரத்தினம் கொலை முயற்சி ஆகியவற்றின் பின்னணியில், அரசியல் இயக்கம் ஒன்று உள்ளது என்பது பற்றி நாம் அறிவோம். இவற்றின் மீதான விசாரணைகள் தற்போது நடைபெற்றுவருகிறது. விசாரணைகளின் பின்னர், இவை பற்றிய விபரமான தகவல்கள் வெளியிடப்படும்.

இவ்வாறு பிரதி தபாற்துறை அமைச்சர் திரு. ரீ பி வெரப்பிட்டிய தேசிய அரசுப் பேரவையில் கூறினார்.

நேற்று முன்தினம் ஒத்திவைப்புப் பிரேரணையின்போது இரத்தினபுரி எம் பி திரு. புஞ்சிநிலமேயின் கேள்விஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே திரு வெரப்பிட்டிய மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் நல்லூர் எம் பி திரு ஸி அருளம்பலம் கொலை முயற்சி தொடர்பான விசாரணைகள் முடிவுற்று விரைவில் சந்தேகநபர்கள்மீது வழக்குத் தொடரப்படவுள்ளது என்றும் திரு கனகரத்தினம் கொலை முயற்சிபற்றி தனிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் திரு வெரப்பிட்டியா கூறினார்.

புஞ்சிநிலமேயின் கேள்வி

திரு புஞ்சிநிலமேயின்கேள்வி

(6-ம் பக்கம் பார்க்க)

வேலைநிறுத்தம்: நிலைமையில் மாற்றமில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகரசபை ஊழியரின் வேலை நிறுத்தம் நேற்று இரண்டாவது தினமாக தொடர்ந்து நடைபெற்றது.

[illegible] நில் கூடாரம் அமைத்து, வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்கள் சுலோக அட்டைகளுடன் அமர்ந்திருந்தனர்.

வேலைநிறுத்தத்தினால் பொது மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென்று, யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் ஆணையாளர் திரு. கே. சிவஞானம் தெரிவித்தார்.

சில பகுதிகளில், நேற்று முன்தினமிரவு மின்சாரத் தடை ஏற்பட்டதாகவும், இது நாசவேலையல்லவென்றும், தற்[illegible] என்றும் இதனைச் சீர்செய்ய உடன்நடவடிக்கை எடுக்கப் பட்டதாகவும் அவர் கூறினார்.

வழக்கமிபோல் வீதி விளக்குகள் போடப்பட்டதாகவும் அவர் கூறினார்.

(6-ம் பக்கம் பார்க்க)

இலங்கைத் தமிழருக்கு கருணாநிதி வாழ்த்து

தமிழகம் சென்ற நவசோதி தகவல்

[கொழும்பு]

"இலங்கைத் தமிழர்களுக்கு என் அன்பையும், வாழ்த்துக் களையும் தெரிவியுங்கள்" என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தமிழகம்சென்று அவரைச் சந்தித்த தம்மிடம் தெரிவித்ததாக இலங்கை கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றத் தலைவர் திரு. நவசோதி தெரிவித்தார்

கலைஞர் சுகவீனமுற்றிருப்பதாகவும் திரு. நவசோதி சொன்னார்.

தமிழகம் வருகைதந்த திரு. க. நவசோதிக்கு ஆலத்தூர் தி. மு. க. ஒன்றியத்தினர் வரவேற்பளித்தனர். இதையடுத்து அண்மையில் ஆரம்பிக்கப் பட்ட தமிழக-ஈழ நல்லுறவுக் கழகத்தில் திரு. நவசோதி இலங்கைத் தமிழரின்குறித்து சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

ராஜபுரத்தில் தி. மு. க. ஒன்றியத்திலும் இந்தி எதிர்ப்புப் போராட்ட தியாகிகள் வீரவணக்கநாளன்று சேலத்தில் தி. மு. க. மாவட்ட மாணவர் குழு ஒழுங்கு செய்த பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் நவசோதி உரையாற்றினார்.

(2)

கனகர் கொலை முயற்சி: நெடுங்கேணியில் வல்லை வாலிபர் கைது!

(யாழ்ப்பாணம்)

பொத்துவில் எம். பி. கனகரத்தினத்தின் கொலைமுயற்சி தொடர்பாக ரகசிய பொலிஸாரின் தீவிர விசாரணையைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில், நெடுங்கேணியில் வைத்து, வல்வெட்டித்துறையை சேர்ந்த இளைஞர் ஒருவரை கைது செய்யப்பட்டுள்ளார், எனத் தெரிகிறது.

நெடுங்கேணியில் அகதிகள் குடியேற்றத்தில் ஈடுபட்டிருந்த இவ்வாலிபரை, விசாரணைக்காக ரகசியப் பொலிஸார் கொழும்புக்கு அழைத்துச் சென்றுள்ளனர் எனத்தெரிய வருகிறது.

கொழும்பிலிருந்து தமிழ் இன்ஸ்பெக்டர் ஒருவரின் தலைமையில் வந்த 4 பேரடங்கிய ரகசிய பொலிஸ் கோஷ்டியினர் வடபகுதியில் பல இடங்களிலும் திடீர் சோதனை நடத்தியதாக தெரிய வருகிறது.

குறிப்பாக வல்வெட்டித்துறை, உரும்பராய் பகுதிகளில் ரகசிய பொலிஸார் அதிக நேரத்தை செலவிட்டனர் எனத் தெரியவருகிறது.

[6-ம் பக்கம் பார்க்க]

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில்

'சிட' முறை நியமனத்தால் சட்டப்படி வேலை இயக்கம்

பேரவையில் 'அமிர்' குற்றச்சாட்டு

[கொழும்பு]

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் ஐ. தே. க. அமைப்பாளர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் ஒருவர் வழங்கிய 'சிட்' மூலம் 35 பேர் கடந்த மாதம் 18 ம் திகதி சம்யாசம்ய ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாகவே தற்போது சட்டப்படி வேலைசெய்யும் இயக்கம் மேற்கொள்ளப் பட்டுவருகிறது என்று எதிர்க் கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர் தலிங்கம் தேசிய அரசுப் பேரவையில் கூறினார்.

நேற்றுமுன்தினம் ஒத்திவைப்புப் பிரேரணையின்போது திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் பல அங்கத்தவர்களை கூச்சலிட்டனர்.

கூச்சலுக்கு 'அமிர்' பதில்

எதுவுமே முடியாத பட்சத்தில் உங்களுக்குகூச்சல் போடத் தான் தெரியும் கூச்சலிநிறுத்தி நாம் கூறுவதைக் கவனமாகக் கேட்டு உங்கள் தடித்த மண்டைக்குள் அவற்றைப்போக விடுங்கள் என்று திரு. அமிர்தலிங்கம் கூச்சலிட்ட உறுப்பினர்களைப் பார்த்துக்கூறினார்.

அமிர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

காங்கேசன்துறை தொழிற் சாலைப் பகுதியின் காணிச் சொந்தக்காரர்களுக்கும் அங்கு

[6-ம் பக்கம் பார்க்க]

உடுப்பிட்டி ராஜலிங்கம் இரு தடவை விசாரணை

(கொழும்பு)

திரு. கனகரத்தினம் கொலை முயற்சி தொடர்பாக உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் இரண்டு நாட்கள் இரகசியப் பொலிசாரினால் விசாரணை செய்யப்பட்டுள்ளார்

நேற்றுமுன்தினம் இரவு 7 மணி முதல் 10 வரையும் பின்னர்நேற்றுக்காலை 10 மணி முதல் பகல் 1 மணிவரை திரு. ராஜலிங்கம் விசாரணை செய்யப்பட்டதாகத்தெரிகிறது.

'புலிப்படை' பற்றி தீவிர விசாரணை

பொலிசார் 'புலிப்படை' பற்றியே தற்போது மிக்க தீவிரமாக விசாரணைசெய்து வருகின்றனர் என்றும் இன்னும் சில தினங்களில் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு விடுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உடல்நிலை முன்னேற்றம்

திரு. கனகரத்தினத்தின் உடல் நிலை முன்னேற்றமடைந்துவருவதாகவும் அடுத்த வாரமளவில் இரண்டாவது சத்திரசிகிச்சை செய்யப்பட்டு உடலில் இருக்கும் குண்டுகள் அப்புறப்படுத்தப்படும்என்றும் டாக்டர்கள்கூறினர். [ம-இ]

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்
வழ. இல. A. 1404 MB/14970
சுப்பிரமணியம் பொன்னம்பலம்,
118, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

வாதி

எதிராக
சுப்பிரமணியம் கனகசபை பெண் நாகம்மா,
இல; 6, கனகசபை அவென்யூ, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

பிரதிவாதி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் A. 1404 MB/14970-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப் படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் கணியை 1978-ம் ஆண்டு மாசி மாதம் 27-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி (27-2-78) தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதி குறித்த வாதிக்கு ரூபா 13900/-வும் மேலும் 10,000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 4½% வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1975-ம் ஆண்டு ஆடி மாதம் 28-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1976-ம் ஆண்டு மார்கழி மாதம் 15-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீதம் வட்டியும் வழக்குச்செலவு ரூபா 950/78 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை "மூத்தயினான் வயல்" பரப்பு நெல் இலாச்சம் 2 குளி 8 விசாலம் கொண்ட காணிக்குள் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களுக்குள் வடக்குப் பக்கமாகவுள்ள வரி மதிப்பு இலக்கம் 37 கொண்ட கிட்டங்கியும், கோடிப்புறமாக உள்ள கிணற்றுக்கும் மலசல கூடத்திற்கும் உள் முற்றத்திற்கும் கொறிடோராலும் போகவும் வரவும் உரித்தும் இத்துடன் ஆஸ்பத்திரி ரோட்டிலிருந்து அக்கிணற்றுக்கும் மலசல கூடத்திற்கும் போவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள போகவும் வரவும் உரித்தும் மேற்படி வரி மதிப்பு இலக்கம் 37 கொண்ட கிட்டங்கியானது கிழக்கிலும் மேற்கிலும் உள்ள விறாந்தைகளை உள்ளடக்கி வடக்கிலிருந்து தெற்காக (12) பன்னிரண்டு அடி கொண்டதும் கிழக்கிலிருந்து மேற்காக 41 அடி கொண்டதும் இதற்கு எல்லை கிழக்கு ரோட்டு வடக்கு சீ. இராமலிங்கத்திற்குரியவாதனம், மேற்கும் தெற்கும் முழு ஆதனத்தினதும் மிகுதிப்பாகம் எஸ். பசுபதி செட்டியாருக்குரியவாதனம் இதடங்கலும் (முழு ஆதனம் டீ 125/30 பதியப்பட்டிருக்கிறதென்றும் இதன் மிகுதி டீ 164/197ல் பதியப்பட்டிருக்கின்றது.

சி. செ. பாலசிங்கம்,
(கொமிஷனரும் மதிப்பாளரும்)

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
24-1-78. 835

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல: ஈடு 14823
வட்டுக்கோட்டை கனகரத்தினம் நரேந்திரன்

வாதி

எதிராக
பொக்கணை ஊரெழு.
1. சோமசுந்தரம் கணபதிப்பிள்ளை சோமசுந்தரமும் பெண்
2. இந்திராதேவியும்

பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 14823-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப் படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1978-ம் ஆண்டு மாசி மாதம் 16-ந் திகதி (16-2-1978) வியாழக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொவை

ரூபா 4,880/-ம், 23-4-75 தொடக்கம் 9-11-76 வரைக்கும் ரூபா 3,000/-க்கு 15 வீத வட்டியும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை 9 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 546-75 சதமும்.

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கும் பகுதி கோப்பாய் கோவிற்பற்று ஊரெழு இறை "சீமந்தபுலம்" நில. பர 8ம் குளி 2½ம் செய்பயிர் வான்பயிர்களும் மேலும் கணபதிப்பிள்ளை செல்லையாவுக்கும் பெண் பாக்கியப்பிள்ளைக்குமுரிய வடக்கெல்லைக் காணியிலுள்ள பங்கும் இந்த் நில பர. 8 குளி 2½க்கும் எல்லை கிழக்கு வைத்திலிங்கம் ஞானசேகரம் பெண் சகுந்தலாதேவியினாதனம், வடக்கு 12 அடி அகலமுள்ள ஒழுங்கை முகப்பும், கணபதிப்பிள்ளை செல்லையாவுக்கும் பெண் பாக்கியப்பிள்ளைக்குமுரிய ஆதனமும் மேற்கு பரராஜசிங்கம் பெண் செல்லம்மாவினாதனம், தெற்கு தம்பையா நாகலிங்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும் அத்துடன் கணபதிப்பிள்ளை செல்லையாவுக்கும் பெண் பாக்கியப்பிள்ளைக்குமுரிய வடக்கெல்லைக் காணியின் கிழக்கெல்லை வழியாக வடக்கிலிருக்கும் ரோட்டுக்குச் செல்வதற்காக விடப்பட்ட 12 அடி அகல ஒழுங்கையில் பங்கும்.

செ. பாண்டித்துரை,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

மல்லாகம்,
29-12-77. 8393

"தனியான கூட்டுறவு

மீன்பிடிச் சங்கம் மானிப்பாய்க்குத் தேவை"

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் தொகுதிக்கென தனியான மீன்பிடி கூட்டுறவு சங்கமும், மானிப்பாயில் அல்லது சுன்னாகத்தில் மீன்பிடி கூட்டுத்தாபனத்தின் சில்லறை மீன் விற்பனை நிலையம் ஒன்றையும் நிறுவித்தரும்படி மானிப்பாய் தொகுதியில் கடந்த தேர்தலில் ஐ.தே.கட்சி வேட்பாளராக போட்டியிட்ட திரு.எஸ்.அலோசியஸ் கடற்தொழில் அமைச்சர் பெஸ்டஸ் பெரெரா வைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

"மேற்படி தொகுதியில் நாளாந்தம் மீனுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. தனிப்பட்ட மீன்,கருவாட்டு வியாபாரிகள் இவற்றால் கொள்ளை லாபம் பெறுகிறார்கள். பாவனையாளர்கள் நாளாந்த தேவைக்கு மீனைப் பெறமுடியாது இருக்கிறது. எனவே உடனடியாக மீன் விற்பனை நிலையம் ஒன்றை நிறுவ ஆவன செய்யும்படி வேண்டுகிறேன்.

அத்துடன் மானிப்பாய் தொகுதிக்குட்பட்ட சாவற்கட்டு, ஆனைக்கோட்டை, நவாலி, சுதுமலையைச் சேர்ந்த மீனவர்கள் பண்டத்தரிப்பு மீன்பிடிக் கூட்டுறவுச்சங்கத்திலேயே அங்கம் வகிக்கிறார்கள் பண்டத்தரிப்பு மீன்பிடிக் கூட்டுறவுச்சங்கம் இவர்களால் அதிகம் இலாபம் ஈட்டினாலும், சங்க நிர்வாகம் இவர்களை பாரபட்சமாகவே நடத்துகிறது. சங்க நிர்வாகத்தில் உள்ள ஒரு சிலர் தமது தனிப்பட்ட செல்வாக்கை பயன்படுத்தி, சங்கம் திறமையாக செயல்பட முட்டுக்கட்டை போடுகிறார்கள். அத்தோடு மேற்படி கிராமத்தலைவர்கள் மேற்படி சங்கத்தோடு தொடர்பு வைக்க தூரமும் ஒருகாரணம். எனவே சில்லறை மீன்விற்பனை நிலையம் ஒன்றும் தனியாக மானிப்பாய் தொகுதிக்கென மீன்பிடி கூட்டுறவுச்சங்கம் ஒன்றும் அமைத்துத் தரும்படி உங்களையும் மீன்பிடி கூட்டுத்தாபன தலைவரையும் வேண்டுகிறேன். அத்துடன் பண்டத்தரிப்பு மீன்பிடி கூட்டுறவு சங்கம் திறமையாக நிர்வாகத்தை நடத்த, இறந்தகாதத்தில் சங்கத்தின் நிர்வாகத்தைப் பற்றிய விசாரணை கமிஷன் ஒன்றை நிறுவும்படியும் வேண்டுகிறேன். என்று திரு. அலோசியஸ் தமது வேண்டுகோளில் கூறியுள்ளார். [க]

சிறிமா—

~1ம் பக்கத் தொடர்ச்சி)

4ம் மாடியில்வைத்து நிர்வாணமாக்கி கொடுமைப்படுத்தி அந்த இளைஞரது ஆண்மையைப் பறித்துவிட்டனர். ஆனால் 4 வருடங்களுக்குப்பின்னர் அந்த இளைஞரை தவறுதலாகக் கைதுசெய்ததாகவும், சந்தேக நபர் அவர் அல்ல என்றும் கண்டுபிடித்ததை அடுத்து அந்த இளைஞர் விடுதலை செய்யப்பட்டார். இதுபோன்ற தவறுகளுக்கே திருமதி பண்டாரநாயக்கா பிராயச்சித்தம் கேட்கவேண்டும் என்றும்அவர் கூறினார். [ம-இ]

தேவை

கீழ்க்காணும் தொழில் பகுதிகளுக்கு வேலை தெரிந்தவர்களும், வேலை பழகுபவர்களும் தேவை.

1. லேத் ரேணிங்வேலைகள் (லேத்மன்)
2. கார் எலக்ரிக் வேலைகள் (கார் எலக்ரிஷன்)
3. மோட்டார் றிவைன்டிங் வேலைகள் (கொயில் றிவைண்டர்)
4. பாடல் றெக்கோடிங் வேலைகள் (றெக்கோடிங் பார் ரெக்னிஷன்)
5. றெக்கோடிங் பார் மனேஜர்
6. வேக்ஷொப் மனேஜர்

எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும்

விக்ரர் அன் சன்ஸ்

(Govt. Approved Industry)
100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
8392

மரண அறிவித்தல்

இ. ஞானப்பிரகாசம் (பொன்னுத்துரை)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தாளையடி வாசியுமான இ. ஞானப்பிரகாசம் (பொன்னுத்துரை) 29-1-78 ஞாயிற்றுக்கிழமை தாளையடியில் காலமானார். இவர் அலேசம்மாவின் அன்புக்கணவரும் மேரி, வில்லி, சங். சகோ, மேரி, இராணி (மங்களூர்) மேரியோசேப் (லண்டன்) மேரி கிறிஸ்ரியன், மேரி அற்புதமலர், மேரி யோகதாஸ், மேரி பெயாற்றிக்ஸ், மேரி இருதயதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செலஸ்ரீன்ராஜா (கிராம சேவையாளர்), சிவசுப்பிரமணியம் (இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் மாமனாரும். ரொக்சி, யெசி, ரொபின்சன், பிரதீபன் ஆகியோரின் பாட்டனாரும். மயிலிட்டியைச் சேர்ந்த ஐக்னேஸ், பேதுருப்பிள்ளை ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல்கள் 3-2-78 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு தாளையடி புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர்.

8391

வரி விளம்பரம்

விற்பனைக்கு

சிறந்த இன செவ்விளநீர்த் தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு. மில்க்வைற், யாழ்ப்பாணம். 8388

நீமியா உரம்: மிளகாயிலும் வெங்காயத்திலும் அதிக விளைச்சலைப் பெற நீமியா உரத்தைப் பாவியுங்கள்.— ஓர் மில்க்வைற் தயாரிப்பு. 8362

நீராவியடி பிறவுண் ரோட்டில் 3 பரப்புக் காணியும் புதிய வீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: Dr. ப. விக்னேஸ்வரன், பிரவுண் ரோட், யாழ்ப்பாணம். 8388

திறமைச்சித்தி நிச்சயம் ஜி. சி. ஈ. உயர்தரம் அண்மைக் கால பரீட்சை வினாக்களும் விடைகளும் பௌதிகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல், தூயகணிதம், பிரயோககணிதம் ஒவ்வொன்றும் ரூபா 19/40. தபாற் செலவு ரூபா 1/- யூனைட்டெட் இன்ஸ்ரியூட்ஸ், நெல்லியடி. 8381

25 ஸ்ரீ 5000 தொடர்பிலக்க முடைய பேக்குசன் டிராக்டர்-135 பெட்டியுடன், டிஸ்க்கே. பாலசிங்கம், வினாயகர் வீதி, நல்லூர் வடக்கு. 8387

பயிற்சி

3 மாத விசேட A. M. I. M. I [London] பரீட்சைக்கான மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 10-02-1978ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு: அதிபர், இன்ஸ்ரிரியூட் ஒப் எஞ்னியரிங் ரெக்னோலொஜி, 11/B ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 8374

WANTED

Well established Colombo group of companies in Mannar District require qualified book-keeper either sex immediately I C M A three parts and auditing experience prefered. Interview Jaffna Rest House Today 1 pm. to 7 pm. 8389

சன்சயின்
அரைபார்சோப்
இன்றே
கேட்டுவாங்குங்கள்
லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி.

இன்று புதிய கட்டிட திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

அரசாங்கத்தின் பன்முகப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் ரூ 50,000 செலவில் பூநகரி மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டிடத் திறப்பு விழா இன்று நடைபெறவுள்ளது புதிய கட்டிடத்தை கிளிநொச்சி எம் பி. திரு வீ ஆனந்தசங்கரி திறந்து வைப்பார்.

இவ்விழா வடமாநில வித்தியாதிபதி திரு. ரி மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறவுள்ளது. பரந்தன் வட்டாரகல்வியதிகாரி திரு. அ. தங்கராசா பூநகரி உ. அ. அதிபர் திரு ஆ. குணநாயகம்

(5-ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு
The Eelanaadu

மாநில சுயாட்சி

மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை இன்று நேற்று எழுந்ததல்ல. 'திராவிட நாடு' கோரிக்கையை அறிஞர் அண்ணா கைவிட்ட காலத்திலேயே இத்தகை கோரிக்கை தென்னாட்டில் முளைவிட ஆரம்பித்தது. இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில் எல்லை மோதல்கள் ஏற்பட்டபோதும் அண்ணா அவர்கள் திராவிடநாடு கோரிக்கையை கைவிட்டார் என்பது பொதுவான கருத்து.

ஆனால் பிரிவினை கோரும் கட்சிகளைத் தடைசெய்யும் சட்டம் கொண்டுவரப்பட விருந்த சமயத்தில் அச்சட்டத்துக்கு 'டிமிக்கி' கொடுக்கவே தேசிய ஒருமைப்பாட்டின் அவசியத்தை வற்புறுத்தும் வகையில் அண்ணா திராவிடநாடு கோரிக்கையைக் கைவிட்டார் என்று வாதிப்பவர்களும் உண்டு.

இதைவிட திராவிடநாடு கோரிக்கைக்கு தமிழ்நாட்டைத்தவிர ஏனைய தென்னாட்டுமாநிலங்களில் ஆதரவு கிடைக்காமல் போனதும் ஒரு முக்கிய காரணம் என்று சொல்வாரும் உண்டு.

அன்றைய தி. மு. க. கழகத்திற்கு தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்தது போல் ஏனைய தென்னாட்டு மாநிலங்களிலும் வரவேற்பு இருந்திருக்குமானால் 'திராவிடநாடு' கோரிக்கையை அண்ணா இலகுவில் கைவிட்டிருப்பாரா என்பது ஓர் அர்த்தமுள்ள கேள்விதான்.

'திராவிடநாடு கோரிக்கை' கைவிடப்பட்டதின் பின்னர் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெறலாயிற்று.

அண்ணாவுக்குப் பிறகு தி. மு. கழகத்தின் தலைமையை ஏற்ற திரு. மு. கருணாநிதியும் ஏனைய தலைவர்களும் இக்கோரிக்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பிரசாரம் செய்பவராயினர்.

'மாநில சுயாட்சி' என்ற போர்வையில் பிரிவினையையே வற்புறுத்திவருகிறார்கள் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

என்றாலும் தமிழ் நாட்டில் இக்கோரிக்கைக்கு பலத்த ஆதரவு ஏற்பட்டிருப்பதை மறுக்க முடியாது. தி. மு. கழகத்தைப்போலவே அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத் தலைவர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்திவருகிறார்.

இந்த இரண்டு கட்சிகளுக்கும் இப்பொழுது தென்மாநிலங்களில் ஆதரவு வளர்ந்துவருகின்றது. ஏற்கனவே பாண்டிச்சேரியில் தேசிய கட்சிகளான காங்கிரஸ் கட்சியும் ஜனதா கட்சியும் ஒதுக்கப்பட்டுவிட்டன.

விரைவில் நடைபெறவிருக்கும் மாநிலத் தேர்தல்களில் இக்கட்சிகள் கர்நாடகம், மகாராஷ்டிரம், ஆந்திரா ஆகிய மாநிலங்களிலும் போட்டியிடவிருக்கின்றன.

மேற்குவங்கத்திலும் மாநில சுயாட்சி கோரிக்கை வலுப்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலைமையில் மாநில சுயாட்சி கோரிக்கையை இந்திய அரசு இனிமேலும் உதாசினம் செய்துவிட முடியாது.

இது குறித்து குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவரெட்டி காலமறிந்து வெளியிட்டுள்ள எச்சரிக்கை இந்திய அரசின் கண்ணைத் திறக்கவேண்டும். இல்லையேனில் அவர் கூறுவதுபோல் தேசிய ஒருமைப்பாடு சிதறிப்போகலாம்.

"மதசார்பற்ற அரசமைப்பு உருவாக்குவதே விவேகம்"

—வி. பொன்னம்பலம்

[பரந்தன்]

"பல மதங்களும் பல இனங்களும் வாழ்ந்துவரும் ஒரு நாட்டில் அவற்றைச் சமம் என்று அங்கீகரிப்பதுடன் மதச் சார்பற்ற அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதே மிக விவேகமானது."

இவ்வாறு செந்தமிழர் இயக்கச்செயலாளரும், கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகருமான திரு. வி. பொன்னம்பலம் கிளிநொச்சியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

கிளிநொச்சி டொன்பொஸ்கோஸ் இளைஞர் மன்றத்தின் 7-வது ஆண்டு நிறைவுவிழாவில் பேசுகையிலேயே திரு. வி. பி. மேற்கண்டவாறு சொன்னார்.

பங்குக்குரவர் யோசப் மைக்கல் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

சென். திரேசா திருச்சபைத் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. வி. பி. மேலும் பேசுகையில் கூறியதாவது:

சமத்துவ நிலை

அரசுகள் எத்தனை அமைந்தாலும் அரசியல் அமைப்புக்கள் எத்தனை தோற்றினாலும் மனித சமூகத்தில் உள்ள இன, மொழி, மத பிரச்னைகளுக்கு சமத்துவம்தான் வழிஎன்ற நிலை அமையும் வரையும் பெரு மாற்றங்கள் எதையும் எதிர்பார்ப்பது ஏமாற்றமாகவே முடியும். பல மதங்களும் பலஇனங்களும் வாழ்ந்துவரும் ஒருநாட்டில் அவற்றை சமம் என்று அங்கீகரிப்பதுடன் மதசார்பற்ற அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதே மிகவும் விவேகமானது.

இந்தியா இக்கொள்கையைக் கடைப்பிடித்து ஓர் அரசியல் அமைப்பை அமரர் நேரு தலைமையில் உருவாக்கியது.

மதசார்பற்ற அமைப்பு முறை

உலகில் உள்ள சமதரும நாடுகள் யாவும் மதசார்பற்ற அமைப்பு முறையையே ஏற்றுக் கொண்டுள்ளன.

தந்தை செல்வா அவர்கள். இலங்கையின் இன மொழிப் பிரச்னை தீர்வுக்காக முன்வைத்த ஆறு அம்சங்களும் மதச்சார்பற்ற அரசு அமைப்பும் ஒன்றுகும். இந்த உண்மையை ஏற்றுத் தீர்க்கும் நிலைமை உருவாகும்போதுதான் மக்கள் மத்தியில் பரஸ்பர நம்பிக்கையும் ஒற்றுமையும் உருவாக முடியும்.

அண்மைக்காலத்தில் கிறிஸ்தவ துறைவிகள் வன்செயல்களால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்த தமிழ்மக்களுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது. மனிதனுக்குய் செய்யும் தொண்டே தெய்வத்திற்குச் செய்யும் தொண்டு என்ற உணர்வைக் கற்பிக்கும் கிறிஸ்தவ தர்மத்திலிருந்து இந்துக்களாகிய நாம் இதை உணர்ந்துகற்று ஏற்று பிறர் வாழ உழைப்போமாக.

முன்னாள் பங்குக்குரவராகக் கடமையாற்றிய அருட் திரு. இராசரத்தினம் அடிகள் ஆசியுரை நிகழ்த்தினார்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (உ)

நல்லரக அரிசிவிலை

ரூ. 3-க்குமேல் போகாது

(கொழும்பு)

நிறந்தரக அரிசியை கொத்து 3 ரூபாவுக்குமேல் விற்பதில்லை என புறக்கோட்டை சில்லறை மொத்த வியாபாரிகள் தீர்மானித்துள்ளனர்.

பிரதி வர்த்தக அமைச்சரிடம் இதற்கான உறுதிமொழியை இவர்கள் நேற்று தெரிவித்தனர். [இ]

தோலகட்டி தாசர்சபைக்கு ஐம்பது வயது பூர்த்தி

இன்று பொன்விழா

யாழ். நகரிலிருந்து பலாலி வீதி வழியாகச் சென்றுல்பத்து மைல் தள்ளி அமைந்திருப்பது வசாவிளான் சந்தி. அச்சந்தியிலிருந்து கிறிதுதூரத்தில்இருப்பதுதான் தோலகட்டி என்ற கிராமம். இக்கிராமத்தின் பெயரி இன்று ஈழத்தில் மட்டுமல்ல பாரதத்திலும், ஏன், கத்தோலிக்க திருச்சபையின் தலைமைத்தாபனமானஉரோமை மாநகரிலும் அடிபட்டுக் கொண்டிருக்கின்றது.

கத்தோலிக்கரல்லாத தவர்களும் கூட வாய்க்கு ருசியானதும் உடலுக்கு உரம்தருவதுமான மதுரபானங்களைப்பற்றிப் பேசும்போது தோலகட்டிப் பானங்கள் பற்றியே மனதில் கொள்வர். கத்தோலிக்கரும் ஆன்மீக வாழ்வில் பற்றுக் கொண்ட அனைவருமே புனித வாழ்வும் தியாக சிந்தையும் கடின உழைப்பும் கொண்ட தோலகட்டித் தாசர்களை கிந்தையில் கொள்வர்.

இந்த ஆரம்பத்தை அடியிட்டவர் அமரர் தோமஸ் அடிகள். இவர் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் பல வருடங்கள் ஆசிரியப் பணியாற்றியவர். புனிதமான அப்பணியைத் திறம்படச்செய்து மாணவருலகத்திலும் பெற்றோர் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்றவர். ஆசிரியராகப் பணியாற்றியபோதே மூற்றுந்துறந்த முனிவராக வாழ்ந்தவர்.

1928ம்ஆண்டு மாசித்திங்கள் இரண்டாம்நாள். புனிதகாணிக்கைத் திருநாளாம். நன்னாளில் கியோமார் ஆண்டகையின் அருளாசியுடன் தவசிலர் தோமஸ் அடிகளின் தலைமையில் ஆறு இளைஞர்கள் தோலகட்டி சென்று அங்கிருந்த பழைய அந்தோனியார் ஆலயத்தில் செபமாலைத்தாசர் சபையைத் தொடங்கினர்.

உலகெங்கணும் வாழும் மக்கள் இறைவனுக்குத் தங்கள் பாவாக்கிரமங்களால் வருத்துவிக்கும் நிந்தைகட்குப்பரிகாரமாக இரவுபகல் இடைவிடாது ஆலயத்தில் மாறிமாறி காவல் காத்து செபம்செய்தல், தவக் கிருத்தியங்களை அனுசரித்தல், மிக அவசியமானபோதுமட்டும் சொற்பமாகப் பேசுதல், ஏனைய தருணங்களனைத்திலும் மௌனம் அனுஷ்டித்தல், தங்கள் கடினமான உழைப்பின் மூலம் தங்கட்குரிய உணவையும் உடை மற்றும் தேவைகளுக்கேற்ற பணத்தையும் சம்பாதித்தல், தங்களைச்சுற்றியுள்ள ஏழைகட்கு வேண்டியதி வாய்ப்புகள் அளித்தல். மிக ஒறுப்பான உணவை அருந்துதல் என்ற தங்களதுகிரமமான வாழ்க்கை நெறிகள் மூலம் இச்செபமாலைத்தாசரி சபையினர் கடந்த ஐம்பதாண்டுகள் ஆன்மீகத்துறையில் மிகப்பெரிய சாதனைகளை நிறைவேற்றியுள்ளனர்.

இன்று ஈழத்திலும், பாரதத்திலும் பதினைந்து கிளைச்சபைகளும் 300க்குமதிகமான துறவிகள் சந்யாசினிகளும் இதே வாழ்க்கைக் கிரமங்களை நிறைவேற்றிவருகின்றனர். இச்சபையை அடியிட்டு 36 ஆண்டுகள் தமது செபதபவலிமையாலும் மிகக்கடினமான உழைப்பினாலும் வழிநடாத்திய தவசிலர் தோமஸ்அடிகள். 1964ம் ஆண்டில் இறைவனில் நிறைவு பெற்றார். அந்தமுற்றுந்துறந்த முனிவரது தன்னலமற்றபணியும் இச்சபையை அடியிடுவதற்குக் காரணரான அமரர் இயோமார் ஆண்டகையினதும் பின்னர் இச்சபையின் செபவலிமையில் மிக்க நம்பிக்கை கொண்டிருந்த அமரர் எமிலியானுஸ் ஆண்டகையினதும் பரிபாலனமும், இன்று பரலோகத்திலிருந்து அம்மூன்று புனிதர்களது வழிநடாத்துகையும் இப்பெரியவிருட்சத்தின்பயனை ஈழமும் பாரதமும் மென்மேலும் அனுபவிக்கவழிவகுக்குமென்பதில் ஐயமில்லை. (அ)

கூட்டணி ஆதரவுடன் அமரர் ஜி. ஜி. நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் நினைவு தினத்தை ஒருமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சியொன்றாக சகலரும் பங்குகொள்ளும் விதத்தில் சிறப்பாகநடத்துவதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பூரண ஒத்துழைப்பு அளிப்பர்.

அமரர் ஜி. ஜி. நினைவுதினம் தொடர்பாகப் பொதுமக்கள் சார்பில் தெரிவான கமிட்டி உறுப்பினரான சட்டத்தரணி எஸ் எம் எச் சஹிட்மேற்கண்டவாறு தகவலைத் தெரிவித்தார்.

நல்லூர் எம் பி திரு எம் சிவசிதம்பரம், கோப்பாய் எம் பி திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை ஆகியோரை இவ்விஷயமாகச் சந்தித்துப்பேசியதாகவும், அவர்கள் பூரணஒத்துழைப்பு தரமுன்வந்துள்ளதாகவும் திரு சஹிட் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், யாழ்ப்பாணம் வந்ததும் ஜி ஜி நினைவு தினம்பற்றி அவரைச் சந்தித்து ஆலோசனை செய்யவிருப்பதாகவும் அவர் கூறினார்.

டாக்டர் ஏபிரகாம்தலைமையிலான குழுவினர் அமரர் ஜி ஜி யின் சிலை நிறுவுவதற்கான ஏற்பாட்டைச் செய்துவருகின்றனர். இவர்களையும் மூவர் குழு சந்திக்கும்.

நாடு திரும்பினர்

[யாழ்ப்பாணம்]

சென்ற ஒரு மாத காலமாக தமிழகம் சென்று பல இடங்களில் இன்னிசை விரிவுரை நிகழ்த்தி பாராட்டுக்களும் பெற்ற "கானகதாவாரிதி" பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசரிமா கடந்த வாரம் சுழம் திரும்பினர். (அ)

நான் செய்வதை யாருமே கண்டு பிடிக்க முடியாது என்று தனக்கு நிச்சயமாகத் தெரியும் போது ஒருமனிதன் என்ன செய்வானோ அதுவே அவனது உண்மையான யோக்கியத்தின் அளவாகும்.

—மெக்காலே

"சிறுபான்மையினர் அடிப்படை உரிமைகள்

குடியரசுச்சட்ட மூலம் அங்கீகரிக்க வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளைக் குடியரசுச்சட்ட மூலம் அங்கீகரிக்கப்படல் வேண்டும்" என வலியுறுத்தும் தீர்மானத்தை அருட்திரு. அன்ரூ பீட்டர் பெர்னாண்டோ தலைமையில் கூடிய அமலமரித்தியாகிகள் மகாசபை எடுத்துள்ளது. பல சிங்களத் துறவிகளையும் உள்ளடக்கிய இச்சபை பின்வரும் தீர்மானங்களையும் நிறைவேற்றியுள்ளது.

"இந்நாட்டில் அண்மையில் ஏற்பட்டுள்ள இனத்தாக்குதல், கட்டவிழ்க்கப்பட்ட வன்செயல்கள் எம்மைக் கவலைக்குள்ளாக்கியுள்ளது. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவனித்துவம் கலாச்சாரம் மொழி ஆகியவற்றைப் பேணி வளர்க்கும் உரிமை உண்டு என்பதை ஏற்று இவ்வடிப்படை உரிமைகளை எல்லா மனிதருக்கும் எவ்வித பாகுபாடுமின்றி பெற்றுக் கொடுக்கும் எல்லா நடவடிக்கைகளையும் முழுதாக ஆதரிக்கின்றோம். எமது கடந்தகாலத் தவறுகளால் நாட்டின் வாழும் ஒருபகுதி மக்களின் வாழ்வு பாதிக்கப்பட்டதை உணர்கிறோம். தங்கள்

[4ம் பக்கம் பார்க்க]

கர்நாடக மாநிலத்தில்

இந்திரா சென்ற கார் மீது கல்வீசி கலாட்டா

குழப்பத்தில் 30 பேர்வரை காயம்

பெங்களூர், பெப். 1

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சென்ற கார் கற்களினாலும் சோடாப் போத்தல்களினாலும் தாக்கப் பட்டது.

பெங்களூரில் கூட்டம் ஒன்றில் பேசுவதற்காகச் சென்று கொண்டிருந்தபோதே இச்சம் பவம் நடைபெற்றது.

திருமதி காந்தியின் காருக் குப் பின்னால் சென்ற பொலிஸ் ஜீப் இச்சம்பவத்தில் முற்றாகச் சேதமுற்றதுஎன்று பொலிசார் தெரிவித்தனர்.

கண்ணீர்ப்புகை பிரயோகம்

கற்களையும், போத்தல்களை யும் வீசி இந்திரா எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பி கூட் டத்தைக் கலைக்க, பொலிசார் தடியடிப் பிரயோகமும் கண் ணீர்ப்புகைப் பிரயோகமும் செய்தனர்.

ஆர்ப்பாட்டக்காரருக்கும் பொலிசாருக்குமிடையே ஏற் பட்ட கைகலபபை அடுத்து 20 பொலிசார் உட்பட 29 பேர் காயமுற்றனர் என பொலிசார் தெரிவித்தனர்.

திருமதி காந்தி கர்நாடக மாநிலத்தில் பிரசாரக் கூட் டங்களில் கலந்துகொள்வதற் காக விஜயம் செய்தார்.

ஒரு கூட்டத்தில் அவர்பேசிக் கொண்டிருந்தபோதுமாணவர் கள் கற்களையும், செருப்புக்களை யும் மேடையை நோக்கி வீசி னர்கள்.

என்றாலும் கூட்டத்தை இந் திரா கட்சியினர் தொடர்ந்து நடத்திஞர்கள்.

குழப்பத்தில் பொலிசார் தலையிட்டு தடியடிப்பிரயோகம் செய்தபோது மீண்டும் குழப் பம் ஏற்பட்டது. இதில் சுமார் 30 பேர்வரை காயமுற்றனர். இதில் அதிகமானவர்கள் பொலிசாராவார்.

[இ]



உதவிப் பொலிஸ் மாஅதிபராக (டி. ஐ. ஜி.) பதவி உயர்வுபெற்றதின் பின்னரி முதல் தடவையாக வாழ்ப்பா ணம் வந்தபோது திரு. ஆர். சுந்தரலிங்கம் வணி ஸ்ரீவேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் நடைபெற்ற விசேஷ வழிபாட்டில் கலந்து கொண்டார். தேவஸ்தானத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ வி. வேங்கடசுப்பிர மணியக்குருக்களிடம் அவர் பிரசாதம் பெற்றுக் கொள் கிறார்.

சுகவீனமுற்றுள்ள வேளையிலும்

நகரின் நலம் நாடும் யாழ். விசேடஆணையாளர்

[வாழ்ப்பாணம்]

தற்போது சுகவீனமுற்று யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் யாழ். மாநகரசபை விசேடஆணையா ளர் திரு. கே. சிவஞானம் நகரஅபிவிருத்தி, பராமரிப்பு பற்றியே உத்தியோகத்தர் களுடன் சம்பாஷித்து வரு கிறார்.

கிட்னி கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ள ஆணையா ளரை ஒய்வு எடுக்குமாறு டாக்டர்கள் ஆலோசனைகூறி யுள்ளனர். கிட்னி கோளா றுக்கு முன்பு சத்திரசிகிச்சை செய்யப்பட்டதாகவும் மீண் டும் அதேஇடத்தில் வீக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் ஆஸ் பத்திரி வட்டாரங்கள் தெரி வித்தன. எக்ஸ்ரேபடம்பிடிக் கப்பட்டுள்ளது.

தினமும் வரியிறுப்பாளர் களும் மாநகரசபை ஊழியர் களும் வந்து ஆணையாளருக்கு ஆறுதல் கூறிச்செல்கின்றனர்.

நேற்று முன்னாள் உதவி மேயர் திரு. ஏ. துரைராஜ சிங்கம் முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. அந்தோனிப்பிள்ளை திரு. எம். ஜி. பஸீர் ஆகி யோர் ஆணையாளரைப்பார் வையிட்டனர்.

ஆணையாளரால் மிகமிகது வாகவே கதைக்கக் கூடிய தாக இருக்கிறது. மின்சாரப் பகுதி, சுகாதாரப்பகுதி தண் ணீர்ப்பகுதி உத்தியோகத்தர் களும் ஆணையாளரை நேற்று பார்வையிட்டனர். சுகவீன முற்றிருந்தபோதிலும் பரா மரிப்பு வேலைகள் பற்றியும் அபிவிருத்தி வேலைகள் பற்றி யும் உத்தியோகத்தர்களிடம் கேட்டுக்கொண்டிருந்தார்.

வான்களில் சென்று வீதி வெளிச்சம் போட ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் ஒழுங்கைகளில் உள்ள வெளிச்சங்கள்கூப்போடுவதில் சிரமம் உண்டென்றும் மின் சாரப்பகுதி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். மின் சாரம் தடைப்பட்டால் அதனை உடனடியாகத் திருத்த ஏற்பாடு செய்யப்பட்டிப் பதாகவும் அவர் கூறினார்.

தண்ணீர் பகுதியில் ஒரு வர்மட்டுமே வேலைநிறுத்தம் செய்வதாகவும் இந்தவேலை நிறுத்தத்திற்கு பொதுமக்கள் ஆதரவில்லை யென்றும் மற் றொருமாநகரசபை உத்தியோ கத்தர் தெரிவித்தார்.

வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றால் வீதிகளை சுத் தம் செய்யும் வேலைகளை தாங்கள் செய்ய தயாராக இருப்பதாகவும் அவர் கூறி னர்.

புலோலி கொலைமுயற்சி வழக்கில் எதிரி விடுதலை

(வாழ்ப்பாணம்)

புலோலி கொலைமுயற்சி வழக்கில் எதிரி விடுதலை செய் யப்பட்டார். ஜூரி சபையி னர், 5 குற்றச்சாட்டுகளுக்கும் எதிரி நிரபராதி எனத் தெரி வித்ததைத் தொடர்ந்து நீதி பதி எதிரியை விடுதலை செய் தார்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதி மன்றத்தில் நீதிபதி ஜஞப் எம். எம். அப்துல்காதர் முன் னிலையில் விசாரணை செய்யப் பட்டது.

இவ்வழக்கில் புலோலியில் 76-ம் ஆண்டு மார்ச் 11ம் தேதி முருகேசு பாலசுப்பிர மணியம் என்பவர், இராம லிங்கத்தைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும், பாலசுப் பிரமணியம், ஜெயமலர் ஆகி யோருக்குக் காயம் விளைவித்த தாகவும் குற்றம்சாட்டப்பட் டுள்ளது.

எதிரி சார்பில் சட்டத் தரணி ஆர். ஈ. தம்பிரத்தி னம், சட்டத்தரணி ஜே. விஸ்வநாதனின் அனுசரணையு டன் ஆஜராஞர். அரசதரப் பில் சட்டத்தரணி ஆர். ஐ. கனகரத்தினம் ஆஜராஞர்.

(உ-அ)

நிஜலிங்கப்பா ராஜினமா

புதுடில்லி, பெப். 1

பழம்பெரும் அரசியல் வாதி யான திரு. நிஜலிங்கப்பா ஜனதா கட்சியிலிருந்து ராஜி ஞமாச் செய்துள்ளார்.

அரசியலிலிருந்து தாம் வில கிக்கொள்ளவிரும்புவதாலேயே தாம் ஜனதாகட்சியிலிருந்து ராஜினமாச்செய்ய முன்வந் துள்ளதாக திரு. நிஜலிங்கப்பா ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகருக்கு அனுப்பி யுள்ள ராஜினமாக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். [இ]

திருநெல்வேலிச்சந்தியில் போக்குவரத்து நெருக்கடி

(திருநெல்வேலி)

திருநெல்வேலிச் சந்திக்கண் மையில் தினமும் போக்குவரத் துத் தடைப்படுவதாகப் பொது மக்கள் பெரிதும் அசௌகரி யத்திற்குள்ளாகின்றனர்.

திருநெல்வேலிச் சந்தியில் சந்தை அமைந்திருப்பதால் சந்தைக்குப் பொருட்கோப் பெறவரும் பெருந்தொகை யான வியாபாரிகளும் மற்றும் பாவனையாளர்களும் தமது வாகனங்களை வீதியோரங் களில் நிறுத்துவதாலும், வீதி யின் ஓரத்தில் கற்களும், மண லும் குவிக்கப்பட்டிருப்பதா லுமே இப்போக்குவரத்துத் தடைக்குக் காரணமாகும்.

இப்போக்குபிரத்து இடைஞ் சல் காலையிலேயே அதிகம் ஏற் படுவதால் தொழிலுக்குச் செல்பவர்களும், கல்லூரிக்குப் போகும் மாணவர்களுமே பெரி தும் கஷ்டப்படுகிறார்கள்.

இந்நெருக்கடியைத் தவிர்க் கும்பொருட்டு முன்னர் இவ் விடத்தில் பொலிஸார் கடமை யிலீடுபடுத்தப்பட்டனர்; சமீப காலமாக அவர்களும் கடமை யில் ஈடுபடுவதில்லை. (அ)

பசுவும் கன்றும் சின்னம்:

இந்திராகட்சியின் மனு நிராகரிப்பு

புதுடில்லி, பெப. 1

பசுவும், கன்றும் சின்னம் கோரி இந்தியக் காங்கிரஸின் திருமதி இந்திராகாந்தியின் குழுவினர் செய்திருந்த அப்பீல் மனு தள்ளுபடி செய்யப்பட் டது.

இந்திய சுப்ரீம் கோர்ட்டின் அரசியல்சாசனப் பிரிவின் 5நீதி பதிகள் முன்னிலையில் திருமதி காந்தி குழுவின் வழக்கறிஞர் மூன்று மணி நேரம் வாதிட் டார்.

இதை அடுத்து இந்த மனுவை வாபஸ்பெற்றதாகக் கருதி நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.

காங்கிரஸின் 'பசுவும், கன் றும்' தேர்தல் சின்னம் பிரம் மானந்தரெட்டி குழுவுக்கு அளிக்கப்பட்டதை அடுத்து சுப்ரீம் கோர்ட்டில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. [இ]

புதிய சின்னம்

ஒதுக்க கேட்கிறார்கள்

புதுடில்லி, பெப. 1

எதிர்வரும் சட்ட சபைத் தேர்தல்களில் போட்டியிடு வதற்கு தமக்குப் புதிய சின் னம் ஒன்றை ஒதுக்கித் தரு மாறு பிரிந்து சென்ற இந்திரா காங்கிரஸ் குழுவினர் தேர்தல் கமிஷனரிடம் விண்ணப்பித் துள்ளனர்.

அப்பீல் மனு தள்ளுபடி செய்யப்பட்டதை அடுத்தே இவ்விண்ணபபம் அனுப்பப் பட்டது.

இந்திராகுழுவினர் புதிய தேர்தலில் சின்னம் கோரி விண்ணப்பிக்காததினால் இக் குழுவின் வேட்பாளர்கள் சுயேச்சையாளர்களாகவே கரு தப்படுவர் என தேர்தல் கமி ஷனர் திரு. சகதர் ஏற்கனவே அறிவித்திருந்தார். [இ]

ஐ. நா.வில் காந்தி அஞ்சலி

நியுயோர்க், பெப். 1

மகாத்மா காந்தியின் 30வது நினைவுதினத்தை ஒட்டி காந்திஜிக்கு ஐக்கிய நாடுகள் சபையிலும் அஞ்சலி செலுத் தப்பட்டது. [இ]

ஆசிரியர்களை பொலிசார் கலைத்தனர்

[கொழும்பு]

கல்வி அமைச்சின் முன் னிலையில் நேற்றுப் பகல் மௌனஊர்வலம் ஒன்றை நடத்தமுயன்ற ஆசிரியர்கள் பலர் கலகத்தடுப்பு பொலி சாரினால் கலைக்கப்பட்டனர்.

சுமார் அரைமைல் தூரம் வரை குதிரையும் ஜீப்வண்டி களிலும் வந்த பொலிசார் இந்த ஆசிரியர்களைக் கலைத்தனர்.

பொலிசார் விரட்டியபோது ஆசிரியர்களில் இலருக்கு சிறுகாயங்கள் ஏற்பட்டன.

ஊர்வலம் நடத்த முயன்ற ஆசிரியர்களுள் பல பெண் களும் காணப்பட்டனர். பௌத்தபிக்குகளும் காணப்பட்டனர். ஐ.தே.க. அரசுக்கு எதிராக இந்தஹர் வலத்தை இல ஆசிரியர் சங் கங்கள் நடத்த தீர்மானித் திருந்தன. [ம-இ]

குடியரசு...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசிய தேவைகளை இழந்து, தங்கள் சுயகௌர வத்தை இழந்து தவிக்கும் மக்களுக்குப் புனர்வாழ்வு கொடுக்கும் பணிகளில் பங்கு கொண்டு உழைப்பதன் மூலம் இவ்வித இழப்புகளை ஈடுசெய் வோம்.

இந்நாட்டைத் தம் தாயக மாக ஏற்று வாழவிரும்பும் ஒவ் வொருவனுக்கும் அடிப்படை உரிமைகளை வழங்குவதற்கு மக்களாலும் அரசாலும் மேற் கொள்ளப்படும் சகல முயற்சி களுக்கும் எமது ஆதரவு உண்டு.

[கி]

நிமாண்டில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தபாற்கந்தோ ரில் கலாட்டா செய்ததாகக் கைது செய்யப்பட்ட ஆர். சுந்தரலிங்கம் என்ற இளைஞர் இம்மாதம் 6ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

முல்லைத்தீவு மாஜிஸ்டிரேட் திரு. கே. சுந்தலிங்கம் முன்னிலை யில் ஆஜர் செய்யப்பட்ட போது சந்தேக நபர் பிணை மறுக்கப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டார்.

இவர் நேற்று முன்தினம் யாழ். சிறைச்சாலைக்கு கொண்டுவரப்பட்டார். [இ]

சன்சயின்
அரை பார் சோப்
இன்றே கேட்டு
வாங்குங்கள்
லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

வாயாடி (புதிய பிரதி)

"சிறுவர்களுக்கான படக் காட்சி"
பிரதி சனியும் ஞாயிறும் காலை 8-30 மணிக்கு மட்டும் காண்பிக்கப்படும்.
ஆசனங்கள் அனைவருக்கும் அரைக் கட்டணம்
பள்ளிக்கூட ஒழுங்குகளுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்.
4, 5, 11, 12—2—78 தினங்களில் காலை 8-30 மணிக்கு
"TREASURE ISLAND"

Regal (Jaffna)
Daily 4-45, 7-00 & 9-30 p. m.
Victor Mature, Red Buttions
in
THE BIG CIRCUS
(Scope-color)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஓய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி - விஜயா நடித்த
இரு மலர்கள்

50-வது நாளைநோக்கி வெற்றிநடைபோட்டு ஓடுகிறாள்
ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.

ராஜா —யாழ்ப்பாணம்
தினசரி: 4 காட்சிகள்
சௌந்தரராஜன் — விஜயகுமாரி
ஏ. எல். ராகவன் — ராஜ்ஸ்ரீ
கல்லும் கனியாகும்

RIO Now Showing By Popular Demand
The Land That Time Forgot
(Family Entertainment)
From 4-2-78 Grand Release
High Velocity

நாலாவது வெற்றிவாரம்
ராணி வி. பி. கணேஷன் — சுபாக்ஷினி
ராம்தாஸ் — ஜெனீட்டா
யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
பொம்மலாட்டம்

வெற்றி நடைபோடுகிறது
ஸிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்.நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

"இளம் தலைவர்களை உருவாக்கும் கடமை எமக்கு உண்டு"

காவலூரில் 'அமிர்' உரை

[யாழ்ப்பாணம்]

"தமிழ் இனத்தின் நிலை இன்று பெரும் இன்னல்களை எதிர்நோக்கியிருக்கிறது. இந்த இக்கட்டில் இருந்து தமிழினத்தைக் காப்பாற்றுகின்ற பாரிய பொறுப்பு இளைஞர்களின் கையிலேயே தங்கியிருக்கிறது. தமிழினத்திற்கு விடுதலை பெற்றுத் தரவேண்டிய இளைஞர்களை கட்டுப்பாடான முறையில் இட்டுச் செல்ல பல தலைவர்கள் தேவைப்படுகின்றனர். இளம் வயதிலேயே சிறந்த பேச்சாளனாக செயல் வீரனாக இளந்தலைமுறையின் மதிப்பைப் பெற்றவராக தனக்கென ஒரு தனி இடத்தை அமைத்துக்கொண்டிருப்பவர் திரு. மகேந்திரன். சுதந்திரமான தொழிலாள சட்டத்தரணி வேலை பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கு நிறைய வாய்ப்பை அளிக்கும். எங்ஙனம் தந்தை செல்வா எங்களைப் போன்றோரை உருவாக்கினாரோ அதேபோன்று இளந்தலைவர்கள் பலரை உருவாக்கவேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது."

சட்டத்தரணியாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரனுக்கு புங்குடுதீவில் அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல் அதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விழாவிற்கு முன்பதாக திரு. மகேந்திரன் புங்குடுதீவு பாணாவிடை சிவன் ஆலய முன்றலில் இருந்து விழா மைதானத்திற்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

இவ்விழாவில் திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. பேசுகையில் கூறியதாவது:

காவலூர்த்தொகுதி இளைஞர்களின் முன்னணிப்படை வீரனாக திரு. மகேந்திரன் மிளிர்கிறார். தமிழுக்காகத் தொண்டாற்றுபவர்கள் அடிக்கடி சிறைப்படுத்தப்பட்ட போதும் கூட அஞ்சாது தமிழ்ப்பணி புரிந்துவந்த பெருமை இவருக்கிருக்கிறது" என்றார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தனது கருத்தை தலைநிமிர்ந்து நின்று அஞ்சாது சொல்கின்ற தனித்துவம் மகேந்திரனிடம் இருக்கிறது. தந்தை செல்வா அவர்கள் இன்று உயிரோடு இருந்திருந்தால் தனது அன்புத்தொண்டனின் புகழும் பூரணத்துவமும் கண்டு இதயம் குளிர்ந்திருப்பார். இருப்பினும் அவரது ஆத்மா, மகேந்திரனை வாழ்த்தும் என்பதில் ஐயமில்லை. சட்டத்தரணித் தொழிலில் சிறப்புப்பெற்று வளர, தியாகத்தினாலும் பொதுத்தொண்டினாலும் மேன்மேலும் உயரஆண்டவன் அருள் கிட்டுவதாக".

இவ்விழாவில் புலவர் ஈழத்துச் சிவானந்தன் திரு. மகேந்திரனுக்கு "இளந்தளபதி" என்ற பட்டத்தைச் சூட்டி புரட்சி ஆடை போர்த்திக் கௌரவித்தார்.

சிவஸ்ரீ. ஐ. கைலாயநாதக் குருக்கள், சட்டத்தரணி ஆர். விசுவநாதன், க. சதாசிவம், த. ஸ்ரீபதி, கு. க. நடராசா, செ. சிவனேசன்; வே. கா. ஏரம்பு, கி. நா. பாலசிங்கம், நா. ஆ. நமசிவாயம், கே. வி. தவராசா உட்படப்பலர் வாழ்த்துரை வழங்கினர்.

வரவேற்புவிழா மலரை திருக தியாகராசா ஆசிரியர்வெளியிட்டு வைக்க, திரு வி இராகநாதன் முதற்பிரதியைப்பெற்றார்.

வித்துவான் இக கணபதிப்பிள்ளை தலைமையில் "சமுதாயத்தில் நம் சட்ட நண்பன்" என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் திருவாளர்கள் நாக சண்முகநாதபிள்ளை, அனலை ஆறு இராஜேந்திரம், கே என் தர்மபாலன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விழாவில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (உ)

தொழிலாளரின் உழைப்பு

வங்கியில் பணமாகப் போட்டு வீண் விரயமாகிறதாம்

தொழிலாளர் பிரதிநிதி அறிக்கை

[யாழ்ப்பாணம்]

"யாழ். மாநகரசபை ஆணையாளர் மக்களிடமிருந்து தொழிலாளரை பிரிக்க முயலுகின்றார். தொழிலாளரின் உழைப்பை சுரண்டி லட்சக் கணக்கில் வங்கியில்போட்டு பல வீண்விரயங்களுக்கு செலவிடுவதன் மூலம் தொழிலாளரின் நியாயமான கோரிக்கைகளை மறுக்கிறார்".

இலங்கை பொது கைத்தொழில் தொழிலாளர்சங்க யாழ். மாநகரசபை தொழிலாளர்சங்கக்கிளை பிரதிநிதி திரு. எம். ஏ. சி. இக்பால் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்தாவது நாளொன்றுக்கு 5ரூபா 60 சதம் சம்பளம் எடுத்துள்ள தொழிலாளரின் சம்பளம் 4 ரூபா 50 சதமாக குறைக்கப்பட்டது. இதன் மூலம் கிட்டத்தட்ட 400 தொழிலாளர்களிடம் நாளொன்றுக்கு 440 ரூபா வீதம் 13,200 ரூபாவை பெற்றுக்கொண்டனர்.

[6ம் பக்கம் பார்க்க]

இன்று...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்க மகாவித்தியாலய அதிபர் திரு. நா. தணிகாசலம் பிள்ளை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துவார்.

இவ்விழாவை யொட்டி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (உ)

சந்தை நிலவரம்

பொருட்கள் -- யாழ்ப்பாணம்

விபரம்		வெளிச் சந்தை ரூ.-ச.	விற்பனை இலாகா ரூ.-ச.
அரிசி	4 சுண்டு ...	3-75	
உழுந்து [முழு]	றாத்தல் ...	2-00	
பயறு	றாத்தல் ...	3-10	
செத்தல் மிளகாய்	றாத்தல் ...	10-50	
பச்சை மிளகாய்	றாத்தல் ...	2-50	2-10
பெரிய வெங்காயம்	றாத்தல் ...	3-00	2-80
புளி	றாத்தல் ...	1-40	
உப்பு	றாத்தல் ...	-15	
சோயா	றாத்தல் ...	2-50	
கோப்பிக்கொட்டை	றாத்தல்...	20-00	
சர்க்கரை	றாத்தல் ...	2-75	
உருளைக்கிழங்கு	றாத்தல் ...	2-80	
மரவள்ளிக்கிழங்கு	றாத்தல் ...	-80	-50
கத்தரிக்காய்	றாத்தல் ...	1-60	1-00
வெண்டிக்காய்	றாத்தல் ...	1-60	-90
பயிற்றங்காய்	றாத்தல் ...	2-40	1-00
பூசனிக்காய்	றாத்தல் ...	-70	-45
பாகற்காய்	றாத்தல் ...	1-70	-90
புடலங்காய்	றாத்தல் ...	-80	-70
தக்காளி (காய்)	றாத்தல் ...	-90	1-00
" (பழம்)	றாத்தல் ...	1-30	
வாழைக்காய்	றாத்தல் ...		
தேங்காய்	ஒன்று ...	1-00	1-10
கருணைக்கிழங்கு	றாத்தல் ...	-60	-50
கீரை	பிடி ...	-20	
வெங்காயப்பூ	பிடி ...	-60	-50
வல்லாரை	பிடி ...	-25	
தேங்காயெண்ணை	போத்தல்...	2-75	
நல்லெண்ணை	போத்தல் ...	15-50	
கரட்	றாத்தல் ...	2-80	1-80
பீட்றூட்	றாத்தல் ...	1-60	1-00
கோவா	றாத்தல் ...	1-00	-80
லீக்ஸ்	றாத்தல் ...	2-40	1-80
தேசிக்காய்	றாத்தல் ...	1-80	1-20
இராசவள்ளிக்கிழங்கு	றாத்தல் ...	1-50	

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
K. பாலாசந்தரின்
அபூர்வராகங்கள்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-30,
சிவாஜி, ஜெமினி
சரஸ்வதி சபதம்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 2-30, 6-30, 9-30
ஜெமினி - சாவித்திரி
பூஜைக்கு வந்த மலர்

அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில்

இலங்கை மாணவர்க்குப் புலமைப் பரிசில்?

[தொடர்ச்சி]

அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் இரு இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் அளிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுவதாக அண்ணமலைப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம்செய்த தேசிய சுவடிக் கூட்டுத் திணைக்கள உதவிச் சுவடிக் காப்பாளர் திரு க நவரத்தினசோதிக்கு முன்னாள் இந்திய அமைச்சரும் பல்கலைக்கழக துணை வேந்தருமான பேராசிரியர் எஸ் சந்திரசேகர் உறுதியளித்தார்.

காயல்பட்டினத்தில் மூன்றாவது அகில உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் கலந்துவிட்டு டாக்டர் பட்டத்திற்கான ஆய்வுத் தகவல்களைச் சேகரித்தற்காக அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் உபவேந்தரின் சிறப்பு விருந்தினராகத் தங்கியிருந்த திரு நவசோதியிடம் உபவேந்தரி இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இருநாட்டு அரசுமட்டத்தில் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பௌத்தம், மொழியியல் ஆகிய துறைகளிலேயே இப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுமெனவும் உபவேந்தர் குறிப்பிட்டதாகவும் திரு நவசோதி கூறினார்.

சென்னைப் பல்கலைக்கழகம் மாநிலக்கல்லூரி. அடையாறு உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் பேராசிரியர்கள் பாலசுப்பிரமணியம், வி க சுப்பிரமணியம், த திரு நாவுக்கரசு, மே சுந்தரம், கலாநிதி இளவரசு ஆகியோரையும் சந்தித்த திரு நவசோதி சென்னையில் உள்ள தமிழக அரசு சுவடிக் கூடத்திற்கும் சென்று இலங்கை தொடர்பான புராதன சுவடிகளைப் பார்வையிட்டார். [உ]

அமரர் ஜி. ஜி. நினைவுதின முழு நாள் நிகழ்ச்சிகள்

[யாழ்ப்பாணம்]

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் ஓராண்டு நினைவு அஞ்சலிக் கூட்டத்தை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இம்மாதம் 9ம் தேதி மாலை நடத்துவதென ஜி ஜி ஞாபகார்த்தக்குழு நேற்று முடிவு செய்துள்ளது.

வண்ணரிபண்ணை தமிழ்க் காங்கிரஸ் கிளைக்காரியாலயத்தில் திரு. ஆர் என் சிவப்பிரகாசம் தலைமையில் நடந்தகூட்டத்தில் இம்மாதம் 9ம் தேதி காலை சகல சமய வழிபாடுகளை நடத்துவதென்றும், நண்பகல் கிரிமலை மடத்தில் அன்னதானம் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அன்று பிற்பகல் 5 மணிக்கு யாழ். பொதுசன நூலக வளவில் அமரர் ஜி ஜி யின் திலை நிறுவும் இடத்தில் மலர் அஞ்சலி செய்வதென்றும் தொடி தினம் அனுஷ்டிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

தமிழ் சமஜ ஜி ஜி காங்கிரஸும் தமிழ்க்காங்கிரஸ்வாலிப முன்னணியும் ஜி ஜி ஞாபகார்த்தக்குழுவும் கூட்டாக இந்த முடிவுகளைச் செய்துள்ளன. [உ]

பெற்ரோல் நிரப்ப வந்தவர்கள் தாக்கப்பட்டார்களாம்

முல்லைத்தீவில் சம்பவம்

(முல்லைத்தீவு)

அநுராதபுரத்திலிருந்து பெற்ரோல் நிரப்புவதற்குவந்த சாரதியும் உதவியாளரும் முல்லைத்தீவில் வைத்துத் தாக்கப்பட்டதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ப. நோ. கூ. சங்க பெற்ரோல் நிலைய ஊழியர்கள் இருவர் அவர்களைத் தாக்கித் தகாதவார்த்தைகளால் பேசியதாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்புகார்தொடர்பாக பொலிசார் சந்தேக நபர்களான இரு வாலிபர்களையும் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா உதவிப் பொலிஸ் அதிபர் விசாரணை செய்து வருகிறார். [ஆ-நி]

'பாண்டியன் பரிசு'

[யாழ்ப்பாணம்]

குருநகர் சனசமூக நிலையத்தின் 2-வது தயாரிப்பான பாண்டியன் பரிசு வரவரற்று நாடகம் இன்று மாலை குருநகர் கலையரங்கில் மேடையேறுகின்றது.

"ஊழியர் ஒத்துழைப்பு குறை தீர்க்கும்"

— உதவி அரசாங்க அதிபர்

[யாழ்ப்பாணம்]

'கூப்பன் மறுபரிசீலனையால் யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அரைவாசிக்கு மேற்பட்ட கூப்பன்கள் இல்லாது போகும். இதனால் வியாபாரம் குறையக் கூடிய சூழ்நிலை உள்ளது. எனவே, ஏற்படக்கூடிய கஷ்டத்தை ஊழியர்கள் ஒத்துழைத்தால் தீர்த்துக் கொள்ளலாம்''

இவ்வாறு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் கூட்டத்தின் மேற்படி சங்கத் தலைவரும் யாழ். உதவி அரசாங்க அதிபருமான திரு. பி. எல். பற்றிக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் புதிய அரசாங்கம் எமக்கொரு சவாலை விட்டுள்ளது. அரிசி, சீனியில் நாம் தங்கியிருக்காது, யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கம்போல் வியாபாரம் செய்ய வேண்டிவரும்' எனக் குறிப்பிட்டார்.

மேற்படி கூட்டத்தில் ஊழியர் பிரச்னைபற்றி தொழிற் சங்கப்பிரதிநிதி திரு. அ. இலட்சியபூபதி பேசுகையில், 'கூட்டுறவுச் சங்கங்கள் 1971-ம் ஆண்டு புனரமைக்கப்பட்ட பின்னர் 1976-ம் ஆண்டில் மட்டுமே நெறியாளர் குழுவுக்கு ஊழியர் பிரதிநிதி ஒருவர் அனுமதிக்கப்பட்டார்.

'கூட்டுறவு ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்ட ஆளணித் திரட்டு பாரபட்சமாக இருந்தென்று ஊழியர்கள் முறையிட்டதனால் 1977ம் ஆண்டு மார்ச் மாதத்தில் அவ் ஆளணித்திரட்டு நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டது. இதுவரை நிர்வாகம் ஆளணித் திரட்டை திருத்தி அனுப்பி அங்கோரம் பெறவில்லை. இதனால், ஊழியர்கள் நிரந்தர மற்ற நிலையில் இருக்கிறார்கள். அத்துடன் சம்பளச் சலுகை, இயக்குனரைத் தெரிவுசெய்யும் வாக்குரிமையையும் இழந்திருக்கின்றார்கள்.

'சங்கத்துக்கென சொந்தக் கட்டடம் இல்லாததால் 2500 ரூபா மாதாந்தம் வாடகை செலுத்தியே அலுவலகமும் களஞ்சியமும் உள்ளது.

'எனவே இதுபோன்ற குறைகளை நீக்கி, ஊழியர்களின் நலனைப் பேண நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

தலைவர் திரு. பி. எல். பற்றிக் 'ஊழியர்கள் இந்தப் பிரச்னைகளைப் பற்றி ஏற்கனவே அறியத்தந்திருந்ததால் அதற்குரிய பதில் நிர்வாகம் பொது முகாமை ஆகியவற்றுடன்சேர்ந்து ஆலோசித்து பதில் அளித்திருக்கலாம். பல வருடங்களாக வளர்ந்த இந்தப் பிரச்னைகளுக்கு அதிவிரைவில் பரிகாரம் காணமுடியாது. படிப்படியாகவே செய்ய முடியும்' என்று கூறினார். [கூ உ]

மாணவர் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

[கொடிகாமம்]

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய அதிபராகக் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்ட திரு. நாகராசா பொறுப்பை ஏற்றுள்ளார்.

இவ்வித்தியாலய உப அதிபராக திரு காஞ்சநாதனை அதிபராக நியமிக்குமாறு உயர்வகுப்பு மாணவர்கள் 3 தினங்களாக பகிஷ்கரிப்பை நடத்தினர்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினமும், அப்பகுதிப் பெற்ரோர்களும் கூட்டிய சமாதான மாநாட்டைத் தொடர்ந்து பகிஷ்கரிப்புக் கைவிடப்பட்டது.

சாவகச்சேரி எம் பி யின் வேண்டுகோளை ஏற்று உயர் வகுப்பு மாணவர்கள் நேற்று வகுப்புகளுக்குச் சென்றனர். [சு]

வங்கியில்—

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் மாநகரசபை சரித்திரத்தில் வரிவசூல் செய்த காலத்திலிருந்து இன்று வரையும் வரி கூடிச் சென்றுள்ளதே தவிர வரிகுறையவில்லை.

ஆணையாளர் ஆட்சித்திரியிலிருந்துகொண்டு 30-1-78 இல் தொழிலாளர் சகலரும் வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ள வேண்டுமெனவும் 21 கோரிக்கைகள் அடங்கிய அமுலாக்கப்பட்டுவிட்டன எனவும் மற்றக்கோரிக்கைகளில் நடைமுறைக்கு சாத்தியமான கோரிக்கைகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் கதிரிருபம் ஒன்று வெளியிட்டுள்ளார்.

தொழிலாளரின் வேலை நிறுத்தத்தை முறியடிக்க ஆட்சித்திரியிலிருந்து கொண்டே சகல வேலைகளையும் செய்துவருகின்றார்

ஆதலால் எங்கள் வேலை நிறுத்தப்போராட்டத்துக்கு பொதுமக்களும் மற்றும் தொழிலாளரும் பூரணஒத்துழைப்புத்தருமாறு கோருகிறோம் [க]

கங்கேசன்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பணிபுரியும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கும் இங்கு பணிபுரிந்துவேலை இழந்தவர்களுக்குமே இங்கு வேலைவழங்க முன்னுரிமை வழங்கப்படும் என அரசு தீர்மானித்துள்ளது. ஆனால் இப்போது யாரோ எவரோ 'சிட்' கொடுப்பதன் மூலம் வேலை வழங்கப்படுகிறது.

'சிட்' முறைக்கும் அமைப்பாளர்களும் இன்றைய அரசில் இடமில்லை என பிரதமர் ஏற்கனவே கூறியிருக்கிறார் என்று 'அமிர்' சொன்னபோதே பேரவையில் கூச்சல்எழுந்தது.

சிறில் மத்யூ: தொழில் தரும் தோர்களில் உங்கள் 'சிட்'கள் மூலமே வேலையற்றோர் தொழில் கோரி தம்மைப் பதிவு செய்து கொள்கிறார்கள். நீங்கள் உங்களை ஆதரித்தவர்களுக்கு மட்டுமே 'சிட்' வழங்குகிறீர்கள்.

வேளாளர் அதிகம்

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் சிறுபான்மைத் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. வேளாளர் குலத்தின் ஆதிக்கமே அங்கு மேலோங்கி நிற்கிறது

அமிர்: ஒருபோதும்அப்படி நடக்கவில்லை நூற்றுக் கணக்கான சிறுபான்மைத் தமிழர்களும் அங்கு பணி புரிகிறார்கள். [ம-இ]

வேலைநிறுத்தம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளரை முன்னாள் நகரசபை உறுப்பினர்களான திரு. ரி. கே. இராசரத்தினம், திரு. எம். எஸ் பேரின்பநாயகம், மற்றும் மாநகரசபை உத்தியோகத்தர்கள், வரியிறுப்பாளர்கள் நேற்று ஆபத்திரிக்குச் சென்று பார்வையிட்டனர்.

புதிதாக எவரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவில்லையென்றும் நேற்றுமுன்தினம், வேலைநிறுத்தம்செய்தவர்களில் 4 தற்காலிகஊழியர்கள் நேற்று வேலைக்குத் திரும்பினர்கள் என மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

பிறவுண் ரோட்டிலுள்ள உப மின் நிலையம், நேற்றுமுன்தினமிரவு உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு தீவைக்க எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியில் முடிந்தது.

திருநெல்வேலி தண்ணீர் விநியோகப் பிரிவில் வேலை செய்த ஊழியர்கள் நேற்றுப் பலத்த கல்வீச்சுக்காவலாளர்கள்.

வேலைக்கு திரும்பிய சில ஊழியர்கள், பயமுறுத்தப்பட்டதாகவும் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மாநகரசபை எல்லைகளுக்குள் உள்ள உப நிலையங்களுக்கும், திருநெல்வேலி தண்ணீர் விநியோகப் பிரிவுக்கும், பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. யாழ். மாநகரசபை எல்லைக்குள் இரவு பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

துரையப்பா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:-

தமிழரசு விடுதலைக்கூட்டணியின் கொள்கைக்கு எதிராக இயங்கி அரசுக்கு ஆதரவு வழங்குபவர்கள்மீது அண்மைக் காலங்களில் வன்முறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன

முன்னாள் யாழ் மேயரும், முன்னாள் நல்லூர் எம் பி, தற்போதைய பொத்துவில் எம் பி ஆகியோர் மீதும் இது போன்ற நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன

இந்த வன்முறைச் சம்பவங்களை மேற்கொள்ளும் இயக்கத்தையும் அதன் பின்னணியையும் கண்டுபிடித்து அறியத் தரவேண்டும்

ஈ.பி. பிக்கள்

அச்சம்

இதுபோன்ற வன்முறை நடவடிக்கைகளினால் மற்றைய ஈ.பி.க்கள் மத்தியில் அச்சம் தோன்றியுள்ளதாகவும் ஈ.பி.க்கள் சகலருக்கும் கட்சி மாறும் உரிமை உண்டென்றும் திரு புஞ்சிநிலமே கூறினார் (ம-இ)

வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுவதாகவும், பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாகவும், இதுவரை வேலைநிறுத்தத்தில் பங்குபற்றாத நகரசுத்திப் பிரிவில் ஒருபகுதியினரும் வாகனசாரதிகளும் வேலைநிறுத்தத்தில் குதிக்கச் சம்மதித்துள்ளதாக தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கடைசிச் செய்தி

வேலை நிறுத்தத்தை சமரசமாகத் தீர்த்துவைப்பதற்கு சட்டத்தரணி திரு. பூபாலன் மேற்கொண்ட முயற்சியை அடுத்து கடந்த இரவு ஆணையாளருக்கும் தொழிற்சங்க வாதிகளுக்குமிடையே யாழ். ஆஸ்பத்திரியில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. பேச்சுக்கள் இன்றும் தொடரும். [இ]

நெடுங்கேணி—

[1ம்பக்கத் தொடர்ச்சி]

சுரரில் வந்த ரகசிய பொலிஸ் கோஷ்டியினர், நேற்று மாலை கொழும்பு திரும்பியுள்ளனர்.

வெளிநோட்டமிடுவதை சொந்த இடமாக கொண்ட மற்றொரு இளைஞரின் நடமாட்டம் பற்றியும், ரகசிய பொலிஸார் மிக நுணுக்கமாக விசாரணை செய்து வருவதாக கூறப்படுகிறது.

இவ்வினைஞர் யாழ்ப்பாணத்தில் முன்னாள் நடந்த கைக்குண்டுவீச்சு சம்பவம் தொடர்பாக விசாரணைக்குட்படுத்தப்பட்டவரென்றும், கூறப்படுகிறது. (ஈ)

மரண அறிவித்தல்

இரத்தினம் பரமேஸ்வரன்

[சாமிப்பத்தர்]

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த இரத்தினம் பரமேஸ்வரன் [சாமிப்பத்தர்] காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இரத்தினம், சரஸ்வதியின் அன்புமகனும், யோகரத்தினத்தின் கணவரும், வாசுகி, தயாபரன், தேவகி ஆகியோரின் தந்தையும், இராசநாயகம், அச்சலிங்கம், திருமதி கமலா உருத்திரபசுபதியின் சகோதரரும் உடுவில் சாந்தலிங்கத்தின் மருமகனுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [2-2-78] வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்கு உடுவில் மான் பாடசாலை வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக உடுவில் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும.

8399

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" நிதாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிகோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.